S.P. Krishnamoorthy D.R.E.,

98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் ஜனவரி 26 * 2026 * மலர் -1 * இதழ்-237* VOL-1 * ISSUE-237 விலை ரூ.3 * பக்கம் -4

## தாளமுத்து, நடராசன் சிலைகள் திறப்பு:

# தமிழகத்தில் இந்திக்கு என்றும் இடமில்லை; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஜன.26–

மொழிப்போர் தியாகிகள் தினத்தையொட்டி தமிழ்நாட்டில் இந்தி மொழிக்கு என்றும் இடமில்லை என முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் உறுதி பட தெரிவித்துள்ளார். மொழிப்போர் தியாகிகளுக்குஅஞ்சலிசெலுத்தியஅவர் தமிழ் மொழித் தியாகிகள் தாளமுத்து, நடராசன் ஆகியோரின் திருஉருவச் சிலைகளை திறந்து வைத்தார். காஞ்சிபுரத்தில் நேற்று மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகிறார்.

கடந்த 1937–1965 கால கட்டத்தில் தமிழ்நாட்டில் இந்தி திணிப்பை எதிர்த்து மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது தமிழ் மொழியைக் காக்க பலர் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தனர். உயர்நீத்த தியாகிகளை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 25–ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் தினம் தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்படுகிறது.

தமிழின் உரிமை, மரபு மற்றும் அடையாளத்தை காக்க நடைபெற்ற மொழி இயக்கப் போராட்டங்கள் தமிழக வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவை. அவற்றின் பின்னணியையும், மொழிக்காக உயிர்நீத்தோரின் அர்ப்பணிப்பையும் இந்நாள் பொதுமக்களிடம் நினைவூட்டுகிறது. மொழி, பண்பு, இன அடையாளம் ஆகியவற்றை காப்பதற்காக நடந்த போராட்டங்ளை தலைமுறைகள் மறக்காமல் இருக்க இந்த நினைவு நாள் ஒரு முக்கியச் சின்னமாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில் சென்னை மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போர் தியாகிகள் நினைவிடத்தில்முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் பங்கேற்க அவர்கள் கருப்பு உடை அணிந்து ஊர்வலமாக நினைவிடத்துக்கு சென்றனர். அங்கு மலர் வளையம் வைத்து தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் போது, "மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம்" என்ற முழக்கத்தை முதலமைச்சர் எழுப்பினார். தொடர்ந்து, மொழி போராட்டத்தில் உயிர்நீத்த தாளமுத்து, நடராசன் உள்ளிட்டோரின் நினைவிடங்களிலும் அவர்களது உருவப் படங்களுக்கும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது எக்ஸ் வலைதளத்தில் ஒரு பதிவிட்டுள்ளார். அதில் கூறி இருப்பதாவது:

மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்: அன்றும் நேற்றும் என்றும் இந்திக்கு இங்கே இடமில்லை. மொழியை உயிராய் நேசிக்கும் ஒரு மாநிலம், இந்தித் திணிப்புக்கு எதிராக ஒன்றிரண்டு போராடியது. திணித்த ஒவ்வொரு முறையும் அதே வீரியத்தோடு போராடியது. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் உரிமையையும் அடையாளத்தையும் காத்தது. தமிழ்க்காகத் தங்கள் இன்னுயிரையே ஈந்த அந்தத் தியாகிகளை நன்றியோடு வணங்குகிறேன். மொழிப்போரில் இனி ஒரு உயிரும் போகாது; நம் தமிழுணர்வும் சாகாது. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு சென்னை எழும்பூர்தாளமுத்து –நடராசன்மாளிகை வளாகத்தில்அமைந்துள்ள அவர்களது மார்பளவு திருவுருவச் சிலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். இதில் துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முழுவதும்மொழிப்போர்தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டங்கள் நேற்று மாலை நடைபெறுகிறது. காஞ்சிபுரத்தில் நடைபெறும் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசுகிறார். திருவொற்றியூரில் நடக்கும் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றுகிறார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மொழிப்போர் தியாகிகள் நினைவு தினத்தை முன்னிட்டு சென்னையில் தாளமுத்து, நடராஜன் ஆகியோர் படங்களுக்கு துணைமுதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.


சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ஊடக மையம் மற்றும் தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் இணைந்து "ஏன் ? எதற்கு ? எப்படி ?" என்ற தலைப்பில் 8 பிரிவுகளில்நடத்தியவிழிப்புவுணர்வுப்போட்டிகளில்வெற்றிபெற்றவர்களுக்குபாராட்டுச் சான்றிதழ்கள்மற்றும்பதக்கங்கள்வழங்கினார்.இந்நிகழ்வில்தமிழ்வளர்ச்சி மற்றும்செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


தமிழ்நாடு முதலமைச்சர் ஜனவரி 29 கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ள சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360 யினை தொடங்கி வைக்கப்படவுள்ளதையொட்டி அதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் வே. அமுதவல்லி., கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை ஆணையர் இரா. லலிதா, கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


கோயம்புத்தூர்மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மனிதநேய வாரவிழா கண்காட்சியினை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.நாராயணன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மணிமேகலை ஆகியோர் உள்ளனர்.

## கோபி அருகே தீ விபத்தில் கால்நடைகள் உயிரிழப்பு!

கோபி ஜன.26

கோபி அருகே நம்பியூர் கொன்மைடை பிள்ளையார்கோவில் வீதி சேர்ந்தவர் செல்லப்பன் 72விவசாயி இவரது வீட்டின் அருகில் தோட்டத்தின் மாட்டு கொட்டகையில் நேற்று மின்கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் அங்கு கட்டப்பட்டிருந்த 2 வெள்ளாடுகள் 3 வெள்ளாட்டு குட்டிகள், 1 மாட்டு கன்று குட்டி ஆகியவை முற்றிலும் எரிந்து சாம்பலானது.

அங்கு நிறுத்தப்பட்டிருந்த இருச்சக்கர வாகனமும் முற்றிலும் எரிந்து சாம்பலானது. தகவலறிந்து வந்த நம்பியூர்தீயணைப்புதுறையினர்தீயினைஅணைத்தனர். இதுகுறித்து நம்பியூர் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

## வால்பாறை அருகே

## காட்டுப்பகுதியில் திடீர் தீ; 4 ஏக்கர் மரங்கள் எரிந்து நாசம்!

வால்பாறை,ஜன.26–

கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் இரவு நேரத்தில் குளிர், பனிப்பொழிவு, பனிமூட்டம் நிலவி வந்தாலும் அதிகாலை முதல் மதியம் 2 மணி வரை வெயில் வாட்டி எடுக்கிறது. இதனால் வனப்பகுதிகள், தனியாருக்கு சொந்தமான காடுகளில் உள்ள செடி, கொடி மற்றும் புற்கள் காய்ந்து போய் உள்ளன. அதன்படி ரொட்டிக்கடை அடுத்த பாறைமேடு பகுதியில் உள்ள காடுகளில் இருக்கும் செடி கொடி, புற்கள் வெயிலுக்கு காய்ந்து கிடந்தன.

இந்தநிலையில் நேற்று காலை பாறைமேட்டில் காட்டுப்பகுதியின் ஒரு இடத்தில் உள்ள காய்ந்த புற்கள் திடீரென தீப்பிடித்து எரிந்தது. தொடர்ந்து பலத்த காற்றுக்கு தீ ஏக்கர் கணக்கில் மற்ற இடங்களுக்கும் வேகமாக பரவி மளமளவென கொழுந்து விட்டு எரிந்தது. இதன்படி பாறைமேடு பகுதியில் இருந்து லோயர் பாரளை எஸ்டேட் மற்றும் தேன்மலை குறுக்கு பகுதிகள் வரை உள்ள காடுகளில் தீப்பற்றி எரிந்தது.

தகவல் அறிந்த வால்பாறை வனத்துறையினர், தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து தண்ணீரை பீய்ச்சியடித்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக அருகில் உள்ள வனப்பகுதிக்கு தீ பரவாமல் இருக்க அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

சுமார் 4 ஏக்கர் வரை தீப்பிடித்து உள்ளதால் உடனே அணைக்க முடியவில்லை. இந்த தீயில் 4 ஏக்கர் வரையிலான பல்வேறு செடிகொடி, மரங்கள் எரிந்து சாம்பலாகின. வனத்துறையினரின் முதற்கட்ட விசாரணையில், பாறைமேடு பகுதி வழியாக சென்ற சுற்றுலா பயணிகள் அல்லது உள்ளூர் மக்கள் புகைப்பிடித்துவிட்டு காட்டுப்பகுதியில் வீசியதே தீவிபத்துக்கு காரணம் என்று கருதப்படுகிறது.

இதுகுறித்து வனத்துறையினர் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.


திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்ட அ.ம.மு.க. துணைப்பொதுச்செயலாளர் கடம்பூர்எஸ்.வி.எஸ்.பி. மாணிக்கராஜா, தென்காசி மாவட்டச்' செயலாளர் ஆர்.ராமசந்திரமூர்த்தி (எ) வினோத், கன்னியாகுமரி மத்திய மாவட்டச் செயலாளர்வி.ரத்தினராஜ், மேற்குமாவட்டச்செயலாளர்ஏ.ஸ்டெல்லஸ் மற்றும்நிர்வாகிகள் இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே 2 நகர அரசு பேருந்துகளின் வழித்தட நீட்டிப்பு இயக்கத்தை ராஜேஷ்குமார் எம்.பி.கொடியசைத்து தொடங்கி வைத்தார்.


மழைக்காலங்களில் சடையனேரி கால்வாயில் கூடுதலாக தண்ணீர் கொண்டு செல்ல திட்ட மதிப்பீடு தயார் செய்ய ஊர்வசி அமிர்தராஜ் எம்.எல்.ஏ., தலை மதகுப் பகுதியில் அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வி.க.நகர் சட்டமன்ற தொகுதி, புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் ஆடுதொட்டி புச்சர் கிரவுண்ட் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மாண்புமிகு மேயர் ஆர்.பிரியா, வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



## தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை சார்பில்

# வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இணைந்து நடத்தும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

திருப்பத்தூர், ஜன.26

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி பகுதியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை சார்பில் திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இணைந்து நடத்தும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நாட்றம்பள்ளியில் உள்ள பிருந்தாவனம் மெட்ரிக் பள்ளியில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஹெல்மெட் அணிவது குறித்து இருசக்கர வாகனம் விபத்து இருசக்கர வாகன ஒட்டும்போது கவனக்குறைவு ஆகியவற்றை குறித்து திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் கே. பன்னீர்செல்வம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பற்றி எடுத்துரைத்தார். இதில் 6000க்கும் மேற்பட்டவர்கள் அரசு பள்ளி தனியார் பள்ளி

மாணவ மாணவிகள் பிருந்தாவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சிறப்பாக நடைபெற்றது. இந்த.பள்ளியின் தாளாளர் ஜி. அசோகன் பள்ளி நிர்வாகி ஏ ஓ கே.நந்தகுமார் பள்ளி முதல்வர் ஜி. பூங்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில்.மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர். கோவிந்தராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர். புண்ணியகோடி, மாவட்ட கல்வி அலுவலர் இடைநிலை. சத்திய பிரபா, ஜோலார்பேட்டை ரயில்வே பாதுகாப்பு படை ஆய்வாளர் நிகில்குமார் கும்தா, வாணியம்பாடி வட்டார போக்குவரத்து ஆய்வாளர் வெங்கட்ராமன் திருப்பத்தூர் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர்.முரளி ஆம்பூர் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர்.அமர்நாத், திருப்பத்தூர் மாவட்ட வணிகர் சங்க பொருளாளர் ஏலகிரி உரிமையாளர். செந்தில் முருகன், ஜே சி ஐ திருப்பத்தூர் மாட்ட முன்னாள் தலைவர். தேவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் தனியார் மற்றும் அரசு பள்ளி ஆசிரியர்கள் பணியாளர்கள் பேருந்து ஒட்டுநர் நடத்துனர் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# 198 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஐநா சபை செயல்பாடு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## மாணவ மாணவிகள் பங்கேற்றனர்!!

திருப்பத்தூர் ஜன.26

திருப்பத்தூர் மாவட்டம் விஷமங்கலத்தில் அமைந்துள்ள சென் மேரிஸ் மேல்நிலைப் பள்ளியில், அகில இந்திய 80வது ஹியூமன் ரைட்ஸ் அமைப்பின் சார்பில், மாணவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை (UNO) குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மாபெரும் துவக்க விழா இன்று நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில், 198 மாணவமாணவிகள் உலகின் 198 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்கேற்று, ஐநா சபையின் செயல்பாடுகள், தீர்மானங்கள் மற்றும் உலக அமைதிக்கான அதன் பங்களிப்புகள் குறித்து அறிந்து கொண்டனர்.

மேலும் 17 நிலையான வளர்ச்சி நோக்கங்கள் குறித்து மாணவர்களின் உரை

நிகழ்ச்சியில், ஐநா சபையின் 17 நிலையான வளர்ச்சி நோக்கங்கள் (Sustainable Development Goals) குறித்து, ஒவ்வொரு மாணவரும் தனித்தனி தலைப்புகளில் உரையாற்றினர்.

வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம், பாலின சமத்துவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உலக அமைதி, மனித உரிமைகள் போன்ற முக்கிய அம்சங்கள் இதில் இடம் பெற்றன.

எதிர்கால ஐநா பிரதிநிதிகளை உருவாக்கும் முயற்சி இந்த விழாவில் கலந்து கொண்ட டாக்டர் செந்தூரப் பாண்டியன், ஹியூமன் ரைட்ஸ் அமைப்பின் சார்பில், மாணவர்களுக்கு உரையாற்றினார்.

அவர், ஐநா சபை கூட்டங்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றன நாடுகளுக்கிடையேயான விவாதங்கள் மற்றும் தீர்மானங்கள் எப்படி அமைகின்றன எதிர்காலத்தில் ஐநா சபையில் பங்கேற்கும் போது மாணவர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து விரிவாக விளக்கினார்.

மேலும், மாணவர்கள் நாளை ஐநா சபையில் பங்கேற்கும் தலைவர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கில், 198 மாணவர்களையும் 17 வகையான தலைப்புகளில் பேச வைத்து, அவர்களின் தன்னம்பிக்கை, பேச்சாற்றல் மற்றும் தலைமைத் திறனை வளர்க்கும் வகையில் இந்த நிகழ்ச்சி அமைக்கப்பட்டது.

பள்ளி நிர்வாகத்தின் பங்கேற்பு இந்த நிகழ்ச்சியில், தாளாளர் டாக்டர் Ln C.S ராஜா. முதல்வர் JC C.R கௌதம். செயலர் C.R வினோத் மற்றும் ஆசிரியர்கள் மாணவமாணவிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மாணவர்களுக்கு உலகளாவிய பார்வை இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மூலம், மாணவர்கள் ஐநா சபை, உலக அரசியல், மனித உரிமைகள் மற்றும் உலக அமைதி குறித்து ஆழமான புரிதலை பெற்றனர்.

எதிர்காலத்தில் உலக மேடையில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களாக உருவாகும் பாதையில், இந்த நிகழ்ச்சி ஒரு முக்கியமான படியாக அமைந்தது.

## பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில்

# அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கும் பொதுமக்கள்; நிதி ஒதுக்காமல் மெத்தனமாக செயல்படும் ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர்!

பாலக்கோடு, ஜன.26

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு ஒன்றியத்தில் உள்ள 32 ஊராட்சிகளில் தலைவர் பதவி காலம் முடிந்து ஓர் ஆண்டு கடந்த நிலையில் தமிழக அரசு தனி அலுவலர்களை நியமித்து உள்ளது.

இந்த நிலையில் கோடைகாலம் துவங்கும் முன்பே குடிநீர் தட்டு பாடு, தெருவிளக்கு, கழிவுநீர் தேக்கம், குப்பை கழிவுகள் தேக்கம், சாலை வசதி உள்ளிட்ட பிரச்சனைகள் பெரிய அளவில் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் ஊராட்சி மன்ற தலைவர்களின் காலம் முடிந்த பிறகும் தற்பொழுது

ஊராட்சி மன்ற கட்டிடத்தில் பெயர் பலகை கூட மாற்றுவதற்கு கூட நிதி ஒதுக்காமல் காலம் தாழ்த்துவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் ஊராட்சி கிராம பகுதியில் தினந்தோறும் குப்பை கழிவுகள் குவிந்தும், ஆங்காங்கே கழிவுநீர் கால்வாய்களை துர்வாரப்படமாலும், பழுதாகிய மின்மோட்டார்கள் சரி செய்யாமலும்

தெருவிளக்குகளை கூட மாற்றாமல் அதிகாரிகள் அலட்சிய போக்குடன் செயல்பட்டு வருவதாகவும்,

ஒன்றியத்தில் தேவையான நிதி இருந்தும் ஊராட்சிகளில் நிதி ஒதுக்கப்படாமல் அனைத்து பணியிலும் முடங்கி போய் உள்ளதால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் விதமாகவும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் கூட நிறைவேற்ற முடியா மல் அதிகாரிகள் செயல்பட்டு வருவது பொதுமக்களை கொதிப்படைய செய்துள்ளது.

ஊராட்சி செயலாளர்கள் இடம் பொதுமக்கள் முறையிட்டால் எங்களுக்கு எந்த அதிகாரம் இல்லை எனவும் ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் ரேணுகா தேவி அவர்கள் எங்களை எந்த பணிக்கும் நிதியை செலவிடக் கூடாது என்று கூறி வருவதாக கூறுகின்றனர். மேலும் தற்பொழுது நடைபெற்று வரும் ஆட்சிக்கு உள்ள நற்பெயரை கெடுக்கும் விதமாக ஊரக வட்டார வளர்ச்சி அவர்களின் அலுவலர் அவர்களின் செயல்பாடுகள் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்

எனவே மாவட்ட நிர்வாகம் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களின் அடிப்படை வசதிகளை நிறவேற்ற உரிய நிதியினை ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.





# பாலக்கோட்டில் பொங்கல் விழாவின் போது மோதல்; 200க்கும் மேற்பட்டோர் காவல் நிலையத்தை முற்றுகை!

பாலக்கோடு, ஜன.26

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு திரௌபதிஅம்மன் கோவிலில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு கடந்த 17ம் தேதி கோயில் வளாகத்தில் எருதாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மேல்தெருவை சேர்ந்த காளை வாழைத்தோட்ட பகுதியை சேர்ந்த ஒருவரை முட்டியது, இதில் அவருக்கு லேசான காயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் இரு தரப்பிற்கும் வாக்குவாதம் ஏற்படவே பெரியவர்கள் சமாதனம் செய்து அனுப்பினர். அதனை தொடர்ந்து அன்றிரவு கோயில் முன்பு நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் வாழைத்தோட்டத்தை சேர்ந்த வாலிபர்களுக்கும், மேல் தெருவை சேர்ந்த வாலிபர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் காவல்துறையினர் இரு தரப்பையும் தடுத்து அனுப்பினர். கலைந்து செல்வது போல் சென்ற வாழைத்தோட்டத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட வாலிபர் மேல் தெருவிற்க்குள் புகுந்து பொதுமக்களை தாக்கினர்.

இதில் படுகாயமடைந்த மேல்தெருவை சேர்ந்த முருகன் ஆபத்தான நிலையில் சேலம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கோவிந்தராஜ் என்பவர் பாலக்கோட்டில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் பொதுமக்களையும், இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனங்களையும் சேதப்படுத்திய வாழைத்தோட்டம் பகுதியை சேர்ந்த வாலிபர்கள் மீது புகார் அளித்தனர்.

போலீசார் அவர்களுக்கு சாதகமாக சாதரான பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து அவர்களை காப்பாற்றி வருவதாகவும்,

இந்த அராஜக செயலில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்ய கோரி

மேல்தெருவை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் இன்று பாலக்கோடு காவல் நிலையத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரித்து வருவதாகவும் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க உள்ளதாக இன்ஸ்பெக்டர் பாலசுந்தரம் உறுதியளித்ததை தொடர்ந்து பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

நடவடிக்கை எடுக்காத போலீசாரை கண்டித்து காவல் நிலையம் முற்றுகையிட்டதால் அப்பகுதியில் திடிர் பரபரப்பு ஏற்பட்டது.



பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகளில் குடியிருப்புவாசிகள் தரும் தகவல்களின் அடிப்படையில், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றும் சேவை நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக இராயபுரம் மண்டலம், வார்டு50, எராபாலு செட்டி தெருவில் உள்ள ஒரு வீட்டிலிருந்து மரச்சாமன்கள் உள்ளிட்ட பழைய பொருட்கள் அகற்றப்பட்டன.




# 6 லட்சம் பைக் டாக்சி ஓட்டுநர்களின் வாழ்வாதார உரிமையை பாதுகாத்த முக்கியமான உயர்நீதிமன்ற தீர்ப்பு!

சென்னை, ஜன.26

கர்நாடக பைக் டாக்சி நலச்சங்கம் (BTA), மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பைக் டாக்சி சேவைகளுக்கு சட்டத் தெளிவை வழங்கிய மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் முக்கிய தீர்ப்பை வரவேற்றுள்ளது. இந்தத் தீர்ப்பு, கான்ட்ராக்ட் கேரிஜ் அனுமதிகளை மோட்டார் சைக்கிள்களுக்கு வழங்குவதில் எந்தத் தடையும் இல்லை என்பதை தெளிவுபடுத்தி, பல ஆண்டுகளாக நிலவி வந்த ஒழுங்குமுறை குழப்பத்தை நீக்கியுள்ளது. இந்த முடிவு, கர்நாடகா முழுவதும் பைக் டாக்சி துறையை சார்ந்து வாழும் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரத்திற்கு உறுதியான சட்ட பாதுகாப்பை வழங்குகிறது. கிக் பொருளாதாரத்தின் மூலம் இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் பெற்றிருந்த நிலையான, கண்ணியமான வேலைவாய்ப்பை இந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது. மலிவான கடைசி கட்டப் பயண சேவையை நாடும் பயணிகளுக்கும் இது பெரும் நன்மையாக அமைகிறது.

BTA தலைவர் ஆதி நாராயணன், இந்தத் தீர்ப்பு ஓட்டுநர்களின் உழைப்பின் கண்ணியத்தை உயர்த்தியுள்ளதாகவும், இனி சட்டத்தின் தெளிவான ஆதரவுடன் நம்பிக்கையுடன் முன்னேற முடியும் எனவும் தெரிவித்தார். சேவைகள் பாதுகாப்பாகவும் விதிமுறைகளுக்கு இணங்கவும் இருக்க அரசு மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் இணைந்து செயல்படத் தொடர்ந்து உறுதியாக இருப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது.

# ஃபிளிப்கார்ட் 'கிராஃப்டட் பை பாரத்' விற்பனை: குடியரசு தினத்தில் பெண்கள் தொழில்முனைவோர், கைவினைஞர்களுக்கு முன்னுரிமை!

சென்னை, ஜன.26

ஃபிளிப்கார்ட் தனது 'கிராஃப்டட் பை பாரத்' 2026 விற்பனையை ஜனவரி 26, 77வது குடியரசு தினத்தன்று நடத்துவதாக அறிவித்துள்ளது. ஆப் மற்றும் இணையதளத்தில் உருவாக்கப்படும் சிறப்பு பிரிவின் மூலம், 2,300க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள், நெசவாளர்கள், தன்னார்வ அமைப்புகள், சுயஉதவிக் குழுக்கள், எம்போரியங்கள் மற்றும் பெண் தொழில்முனைவோரின் பங்கேற்புடன், 1.8 இலட்சம் தனித்துவமான கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. வார்லி, படசித்ரா, மதுபானி, பிச்வாய், டெரகோட்டா உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பாரம்பரிய கலை வடிவங்கள், கைத்தறி, மர கைவினை, மென்மையான தந்த மர பொம்மைகள், பிராந்திய ஓவியங்கள் போன்றவை இதில் இடம் பெறுகின்றன. 2019இல் தொடங்கப்பட்ட ஃபிளிப்கார்ட் சமர்த் திட்டத்தின் கீழ் நடைபெறும் இந்த நிகழ்வு, இந்திய கைவினைப் பாரம்பரியத்தை கொ ண்டாடுவதுடன், கண்ணோஜ், புஜ், பதோஹி, ஹத்ராஸ், ஹிசார், மதுரை, சித்ரகூட், ராமநகரா, காசிப்பூர், உஜ்ஜைன், சுரு, ரத்தன்கர் போன்ற 2 மற்றும் 3ஆம் நிலை நகரங்களைச் சேர்ந்த பெண்கள் நடத்தும் நிறுவனங்களுக்கு சிறப்பு முன்னுரிமை வழங்குகிறது. 300க்கும் மேற்பட்ட புதிய விற்பனையாளர்கள் இணைவதால், மரச்சாமான்கள், வீட்டு அலங்காரம், சமையலறை உபகரணங்கள், ஆடை, வாழ்வியல் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் உள்ளூர் தயாரிப்புகள் நாடு முழுவதும் வாடிக்கையாளர்களை சென்றடைகின்றன. இந்த முயற்சி 1.9 மில்லியனுக்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரத்தில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஃபிளிப்கார்ட் தளத்தில் விற்பனையாளர் கிராஃப்ட் கார்ட் இந்தியாவின் அப்ரஜீதா கூறுகையில், 'சமர்த்' முத்திரை உண்மையான கைவினைப் பொருட்களுக்கு நம்பிக்கை அளிப்பதுடன், குறைக்கப்பட்ட கமிஷன், பிரத்யேக கணக்கு ஆதரவு, பட்டியல் தயாரிப்பு உதவி ஆகியவற்றின் மூலம் சிறு தொழில்முனைவோருக்கு சம வாய்ப்புகளை வழங்குகிறது என்றார். 7 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளிக்கும் சமர்த் திட்டம், பயனாளிகள் 300% வரை வணிக வளர்ச்சி காண உதவியுள்ள ஒரு நாடு தழுவிய டிஜிட்டல் முன்முயற்சியாக தொடர்கிறது.

# சேலம் குளோபல் மெடிக்கல் சென்டரில் அப்போலோ நவீன டயாலிசிஸ் மையம் திறப்பு!

சேலம், ஜன.26

இந்தியாவின் நம்பகத்தன்மை பெற்ற முன்னணி டயாலிசிஸ் சிகிச்சை நிறுவனமான அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்ஸ், சேலம் குளோபல் மெடிக்கல் சென்டர் & மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட நவீன டயாலிசிஸ் மையத்தைத் தொடங்கியுள்ளது. உலகத் தரத்திலான டயாலிசிஸ் இயந்திரங்கள், கடுமையான தொற்று கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவக் குழுவுடன் செயல்படும் இந்த மையம், சேலம் மற்றும் சுற்றுப்புற நோயாளிகளுக்கு பாதுகாப்பான, செலவுக்கேற்ற சிறுநீரக சிகிச்சையை எளிதாகக் கிடைக்கச் செய்கிறது. இந்த வசதி குளோபல் மெடிக்கல் சென்டரின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஞானசேகரன், MS, FRCS (Ed), Dip Urology (London) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்ஸின் முதன்மை செயல்பாட்டு அதிகாரி எம். சுதாகர ராவ் மற்றும் மூத்த சிறுநீரக நிபுணர் , ஆகியோர் கலந்து கொண்டனர். எம். சுதாகர ராவ், மற்றும் டாக்டர் டி. ஞானசேகரன் ஆகியோர், இந்த கூட்டாண்மை மூலம் நெப்ராலஜிஸ்ட் மேற்பார்வையில் உயர்தர ஹீமோடயாலிசிஸ், அரசு சுகாதார காப்பீட்டு திட்டங்களின் கீழ் அணுகல், மற்றும் நோயாளிமையமான பாதுகாப்பான சிகிச்சை சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுவதால், சேலம் பகுதி மக்களுக்கு உலகத் தரத்திலான சிறுநீரக பராமரிப்பு மேலும் எளிதாக கிடைக்கும் என தெரிவித்தனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.33க்குட்பட்ட கவுண்டம்பாளையம், மாநகராட்சி பிரிவு அலுவலகம் அருகில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் " நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாமில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார் , துவக்கி வைத்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருந்து உபகரணப் பெட்டகத்தினை வழங்கினார். உடன் மேயர் திருமதி.ரங்கநாயகி ராமச்சந்திரன் , துணை மேயர் திரு.ரா.வெற்றிசெல்வன், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



### "விசில்" சின்னத்தை வரவேற்கும் விதமாக

# உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றிக் கழகத்தினர் மகிழ்ச்சி கொண்டாட்டம்!

உளுந்தூர்பேட்டை, ஜன.26

தமிழக வெற்றிக் கழகத்திற்கு தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ள "விசில்" சின்னத்தை வரவேற்கும் விதமாக, கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் சார்பில் சிறப்பான மகிழ்ச்சி கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்தப்பட்டது.தொடர்ந்து, பொதுமக்கள் பயணிகளுக்கு அவர்களின் சின்னமான விசில் சின்னம் மற்றும் இனிப்புகள்வழங்கி தமிழக வெற்றிக் கழகத்தினரின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக தலைமை கள்ளக்குறிச்சி கிழக்கு மாவட்ட இணை செயலாளர் மோகன் கலந்து கொண்டார் இதைத் தொடர்ந்து,நகர செயலாளர்கள் விஜய் செல்வா, மெர்சல் கார்த்தி, சக்திவேல், அஜய்குமார், பாரத் பிரகாஷ், கண்ணன், சதீஷ், மாவட்ட நிர்வாகிகள் மணிகண்டன், ஊடகப் பிரிவு மணிகண்டன், நகர நிர்வாகிகள் விஜய், அருண், சுகனேஷ், மணிவண்ணன், கதிரவன், அண்ணாமலை, கவிதா, ஜெயக்குமார், பாலா, விஜய்,ஹரிதாஸ், சிந்தனைச் செல்வன், கதிர், தினேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிர்வாகிகள், "விசில்" சின்னம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என நம்பிக்கை தெரிவித்ததுடன், தமிழகத்தில் மாற்றத்திற்கான அரசியல் பயணத்தில் தமிழக வெற்றிக் கழகம் உறுதியுடன் செயல்படும் என்றும் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியால் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலைய பகுதியில் சிறிது நேரம் உற்சாகமும் பரபரப்பும் நிலவியது.

# விழுப்புரம் மாவட்டத்தில் குடும்ப அட்டை நகல் கார்டு வழங்குவதில் தாமதம் பொதுமக்கள் குமறல்!

விழுப்புரம், ஜன.26

விழுப்புரம் மாவட்டத்தில் குடும்ப அட்டை (ரேஷன்கார்டு) நகல் பிளாஸ்டிக் கார்டு வழங்குவதில் கடும் தாமதம் ஏற்பட்டு வருவதால், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் பொது விநியோகத் திட்ட குறை தீர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் குடும்ப அட்டை தொடர்பான பெயர் திருத்தம், முகவரி மாற்றம், நகல் அட்டை கோரல் உள்ளிட்ட மனுக்கள் பெறப்படுகின்றன.

ஆனால், கடந்த 5 மாதங்களாக நகல் குடும்ப அட்டை கோரி ஆன்லைனில் மனு அளித்த பலருக்கும் இதுவரை எந்த தீர்வும் கிடைக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அலுவலகம் அலுவலகமாக அலைய வேண்டிய நிலை இதுகுறித்து அந்த அந்த பகுதி வட்டவழங்கல் அலுவலகத்தில் விசாரித்தால், "DSO (மாவட்ட வழங்கல் அலுவலகம்) அலுவலகத்தை கேளுங்கள்" என அனுப்பி விடுவதாகவும், அங்கு சென்று கேட்டால், "கார்டு உங்களது வீட்டிற்கே வந்து சேரும்" என்று கூறி மீண்டும் அனுப்பி வைக்கப்படுவதாகவும் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

பணம் கட்டியும் பயனில்லை நகல் குடும்ப அட்டை பெறுவதற்காக அரசு நிர்ணயித்த கட்டணத்தையும் பொதுமக்கள் செலுத்தி வருகின்றனர். ஆனால், "ஒவ்வொரு மாதமும் ஒரே மனுவுக்காக மீண்டும் மீண்டும் பணம் கட்டுகிறோம். கடைசியில் அந்த கார்டு எங்கு செல்கிறது என்பதே தெரியவில்லை"

என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆயிரக்கணக்கான விண்ண ப்பங்கள் நிலுவை விழுப்புரம் மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான நகல் குடும்ப அட்டை விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் முதியோர், பெண்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினர் அலுவலகம் அலுவலகமாக அலைந்து வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் கண்காணிக்க வேண்டும்.இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில்,

"குறை தீர்வு முகாம் பெயரளவிற்கு நடத்தப்படாமல், அதில் பெறப்படும் மனுக்கள் மீது உண்மையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை மாவட்ட ஆட்சியர் நேரடியாக கண்காணிக்க வேண்டும். கார்டு கையிருப்பில் இல்லையெனில் அதனை உடனடியாக பெற்றுத் தரவும், நகல் குடும்ப அட்டை கோரி காத்திருக்கும் மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும்" என்று என்பது பொதுமக்கள் கோரிக்கை.

### கொலை முயற்சி வழக்கில்

# குற்றவாளிக்கு 5 ஆண்டு சிறை தண்டனை!

கோவை,ஜன.26

கோவைகுனியமுத்தூர்சுகுணாபுரத்தை சேர்ந்தவர் சக்திவேல்.இவரது மனைவி ராஜேஸ்வரி.இவர் ஒரு பெண்ணிடம் ரூ.10 ஆயிரம் கடன் வாங்கி இருந்தார். அந்த பணத்தை வழங்க தாமதமாகிஉள்ளது.

இதில் ஏற்பட்ட முன் விரோதத்தில் சிலர்சக்திவேல் மற்றும்அவருடைய நண்பர்செந்தில்குமார் உள்ளிட்டவர்களை சரமாரியாக தாக்கியுள்ளனர், பின்னர் செந்தில்குமாரை கொலை செய்யவும்முயன்றதாக தெரிகிறது.

கடந்த 2014ம் ஆண்டு நடந்த சம்பவம் தொடர்பாக குனியமுத்தூர் போலீசார் பாலசுப்பிரமணியம்உள்ளிட்ட 4பேர் மீதுகொலைமுயற்சிவழக்குப்பதிவு மற்றும் அவருடை நண்பர் செந்தில்குமார் என்பவர் வழக்கு விசாரணையின் போதுஇறந்த போனார்.இந்த வழக்கு விசாரணை கோவை முதலாவது அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.வழக்கை விசாரணை நடத்திய நீதிபதி கலைவாணி,குற்றம்சாட்டப்பட்டபாலசுப்பிரமணியத்துக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூ.2 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்ல மற்றஇரண்டு பேர் விடுதலை செய்யப்பட்டனர், இந்த வழக்கில் அரசு தரப்பில் ப. கிருஷ்ணமூர்த்தி ஆஜராகி வாதாடினார்.

# கோபி அருகே சிறுமிக்கு பாலியல் தொல்லை; முதியவர் கைது!

கோபி, ஜன26

கோபி அருகே 11 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை அளித்த முதியவரை போலீஸார்கைது செய்தனர்.ஈரோடு மாவட்டம், கோபி அருகே நம்பியூர் பகுதியைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் (62). இவரது தோட்டத்துக்கு கூலி வேலைக்கு வந்து செல்பவரின் 11 வயது மகள் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வருகிறார். சிறுமி நாள்தோறும் பள்ளி முடித்து தோட்டத்து உரிமையாளர் ராஜேந்திரனின் பேரக்குழந்தைகளுடன் விளையாடி விட்டு மாலை தந்தை செல்லும்போது அவருடன் வீட்டுக்குச் செல்வது வழக்கம். இந்நிலையில், பள்ளி முடிந்து ராஜேந்திரனின் தோட்ட வீட்டுக்கு நேற்றுமாலை வந்த சிறுமி அவரது பேரக்குழந்தைகளு டன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அப்போது, அந்த சிறு மிக்கு ராயஜேந்திரன் பாலியல் தொல்லை அளித்துள்ளார்.இது குறித்து தனது பெற்றோரிடம் சிறுமி கூறியுள்ளார். அவர்கள் கோபி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். போலீஸார் விசாரணையில், ராஜேந்திரன் சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தது உறுதி செய்யப்பட்டது.இதையடுத்து, போக்ஸோ சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்த போலீஸார், அவரைக் கைது செய்து ஈரோடு மகளிர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# பவானிசாகர் அருகே வேன் மோதி மில் ஆபரேட்டர் பலி!

புளியம்பட்டி,ஜன.26

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அருகே உள்ள பவானிசாகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்பட்ட சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நடந்துள்ளது. பவானிசாகர்–பண்ணாரி சாலை வழியாக, கொத்தமங்கலம் ராஜீவ்நகர் சுப்பிரமணி தோட்டம் எதிரே, இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் (35). வேன் மோதி என்பவர் உயிரிழந்தார். இவர் தற்போது ஈரோடு மாவட்டம், சத்திய தாலுகா, கொத்தமங்கலம் நெரிஞ்சிப்பேட்டை பகுதியில் மனைவி நாகலட்சுமி மற்றும் ஒரு வயது குழந்தையுடன் வசித்து கொண்டு அப்பகுதியில் உள்ள தனியார் மில்லில் ஆபரேட்டராக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் இந்த விபத்து தொடர்பாக, அதே பகுதியைச் சேர்ந்த சிவகுமார் (எ) அசோக் குமார் (45) என்பவர் மீது பவானிசாகர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து குறித்து பவானிசாகர் காவல் நிலைய ஆய்வாளர் அன்னம் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.



# விவசாயிகளிடம் விழிப்புணர்வு!

புளியம்பட்டி,ஜன.26

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டாரத்தில் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கான பஞ்சகவ்யா தயாரிப்பு முறையை விளக்கும் விழிப்புணர்வு மற்றும் செய்முறை பயிற்சியை சத்தியமங்கலம் வட்டாரம், கோணமூலை கிராம பகுதியில் நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில், இயற்கை உரமான பஞ்சகவ்யா தயாரிப்பதற்கான முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. பசுவின் சாணம், சிறுநீர், பால், தயிர் மற்றும் நெய் ஆகிய ஐந்து பொருட்களை கொண்டு பஞ்சகவ்யா தயாரிப்பது எப்படி, அதனை எவ்வளவு நாட்கள் புளிக்க வைக்க வேண்டும், பயிர்களுக்கு எந்த அளவில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் மாணவிகள் செய்முறை விளக்கத்துடன் எடுத்துரைத்தனர்.இப்பயிற்சியில் விவசாயிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பஞ்சகவ்யா பயன்பாட்டால் மண் வளம் மேம்படும், பயிர் வளர்ச்சி அதிகரிக்கும் மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாடு குறையும் என்பதை அறிந்து பயன் பெற்றனர் . பசுமை வேளாண்மையை ஊக்குவிக்கும் இத்தகைய முயற்சிகள் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றது.



அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் 129 –வது பிறந்தநாள் விழா உடுமலையில் கொண்டாடப்பட்டது.இதில் நகரச் செயலாளர்மகேந்திரன் தலைமை தாங்கினார். நகரத் தலைவர் விஜயபிரபு முன்னிலை வகித்தார். விழாவில் மணிகண்டன், சதீஷ்குமார், புகழேந்தி, முத்துக்குமார், சக்தி, பிரசாத் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ரயில்வே ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

ஈரோடு, ஜன.26

ஈரோடு ரயில் நிலைய வளாகத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஈரோடு கிளை துணைச் செயலாளர் சீனிவாசா பட் தலைமைதாங்கினார்,இதில் சேலம் கோட்ட நிர்வாகம், ஆர்ஆர்பி மூலம் பணியிட மாற்றங்கள் வழங்குவதற்கு முன் நிலுவையில் உள்ள அனைத்து டிரான்ஸ்பர் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்ய வேண்டும்.விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளை கடைபிடித்து பணியிட மாறுதல் கோரிக்கைகளை சமர்ப்பித்த சேலம் பிரிவின் மூத்த பணியாளர்களுக்கு நியாயம் வழங்கிட வேண்டும்.உண்மையான மூத்த பணியாளர்களை புறக்கணிப்பது பெரும் அநியாயத்திற்குரிய நிகழ்வாகவும் .விதிமுறைகளை ஒழுங்காக பின்பற்றிய பணியாளர்கள் தண்டிக்கப்படுவது ஏற்க முடியாதது. அவர்களுக்கு தக்க நீதி வழங்க வேண்டும். தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமம் உள்ளிட்ட கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மேயர் ஆர்.பிரியா , சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு199, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு இ36 சாலையில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூ. 40 லட்சம் மதிப்பீட்டில் புதிய மகளிர் உடற்பயிற்சி கூடத்தினைத் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், , மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் க.சங்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரிமாவட்டம்,பாப்பிரெட்டிப்பட்டிவட்டம், மூக்காரெட்டிப்பட்டி, ஸ்டான்லிகல்வியியல் கல்லூரியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்ற முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ.சதீஸ், பார்வையிட்டு, மருத்துவ பயனாளி மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார். உடன் அரூர் வருவாய் கோட்டாட்சியர் செம்மலை துணை இயக்குநர் சுகாதாரம் இராஜேந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்சு.சரவணன், பழங்குடியினர்நல அலுவலர்அசோக்குமார், அரசுத்துறை அலுவலர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.



# பர்கூர் காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு வார விழா விழிப்புணர்வு பேரணி!

கிருஷ்ணகிரி, ஜன.26

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில், காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பர்கூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை கலந்துகொண்டு கொடியசைத்து பேரணியைத் தொடங்கி வைத்தார்.

வட்டாட்சியர்அலுவலகத்தில்தொடங்கிய இந்தப் பேரணி, பர்கூர் நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது. குறிப்பாக நகரின் முக்கிய கடைவீதிகள் பர்கூர் நான்கு முனை சந்திப்பு பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகள் வழியாகச் சென்று, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய வட்டார வளர்ச்சி அலுவலகம் வரை சென்று நிறைவடைந்தது.

இந்தப் பேரணியில், கல்லூரி மாணவிகள் கலந்துக்கொண்டு பதாகைகளை ஏந்திவாறு பொது மக்கள் கவனத்தை ஈர்த்தனர். அவர்கள் சாலை விதிகளைக் கடைபிடிப்பதன் அவசியம் குறித்தும், விதிகளை மீறிச் செல்வதால் ஏற்படும் கோர விபத்துகள் மற்றும் அதனால் குடும்பங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் துண்டு சீட்டு பிரச்சாரனை செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

விபத்தில்லா பர்கூர் உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், பர்கூர் காவல் துணை கண்காணிப்பாளர் முத்துகிருஷ்ணன், பர்கூர் காவல் ஆய்வாளர் இளவரசன், கந்திகுப்பம் காவல் ஆய்வாளர் கஸ்தூரி, போச்சம்பள்ளி காவல் ஆய்வாளர் கோபாகிருஷ்ணன், பாரூர் காவல் ஆய்வாளர் இளவரசி உள்ளிட்ட 4 காவல் நிலையங்களை சேர்ந்த காவலர்கள் உள்ளிட்ட கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



### கோவை கூடலூர் நகராட்சியில்

# ரூ.29.50 லட்சம் மதிப்பில் வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா!

பெ.நா.பாளையம்,ஜன.26

கோவை கூடலூர்நகராட்சி காமாட்சிபுரத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சமுதாயக்கூடத்தைச் சுற்றிலும் பொதுநிதியில் இருந்து ரூ.9 லட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடம் கட்டுதல், மேலும் ரூ.7 லட்சம் மதிப்பில் யு.பி.வி.சி ஜன்னல் மற்றும் கட்டிடத்தின் முன்புறம் பேவர் பிளாக் அமைத்தல், தெற்குப்பாளையம் இ.பி.அலுவலகம் அருகில் 202526ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மானியத்தில் இருந்து ரூ.13.50 லட்சம் மதிப்பில் மழைநீர் வடிகால் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் துவங்க அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இதற்கு கூடலூர் நகர்மன்றத்தலைவர் அ.அறிவரசு தலைமை வகித்தார்.சிறப்பு விருந்தினராக திமுக கோவை வடக்கும மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி கலந்துக் கொண்டு பணிகளை தொடங்கி வைத்து இனிப்புகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, வட்டார மருத்துவர் டாக்டர். சிவலிங்கம், துணைத்தலைவர் ரதி ராஜேந்திரன், நகர்மன்ற உறுப்பினர்கள் துரைசெந்தில்குமார், கீர்த்தனா உதயகுமார், பிரியா, மாடசாமி, பாலசுப்பிரமாணியம், அகில் சந்திரசேகர், சரண்யா சுரேஷ், முருகானந்தம், திமுக கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துக் கொண்டனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு , பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், பிராட்வே, பிரகாசம் சாலை, CSI பிஷப் கோரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு, 6 மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி வண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் ஆர்.பிரியா, மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், , வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, , மண்டலக் குழுத்தலைவர் பி. ஸ்ரீராமுலு, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை டாக்டர் நண்பருடன் காரில் கடத்தல்!

## நகை, பணத்தை பறித்துவிட்டு தப்பிய 3 பேர் கைது!!

கோவை,ஜன.26

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள பெருமாள் புரத்தைச் சேர்ந்தவர் அன்பரசு. இவரது மகன் நவீன் சக்கரவர்த்தி ( 23). இவர் பிசியோதெரபிஸ்ட் படித்து உள்ளார். தற்போது நவீன் சக்கரவர்த்தி கோவை சாய்பாபா காலனியில் பாலசுப்ரமணியம் தெருவில் தற்போது வசித்து வருகிறார். அங்கு இருந்து தொண்டாமுத்தூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் பிசியோதெரபிஸ்ட் டாக்டராக வேலை பார்த்து வருகிறார்.



கடந்த 21 ஆம் தேதி நவீன் சக்கரவர்த்தி அவரது நண்பர் பிரதீப் ஆகியோர் சாய்பாபா காலனி, பகுதியில் உள்ள ஹோட்டல் முன்பு என்று பேசிக் கொண்டு இருந்தனர். அதன் பிறகு அவர்கள் இயற்கை உபாதை கழிப்பதற்காக கலெக்டர் சிவகுமார் தெருவில் உள்ள மாநகராட்சி பூங்கா அருகில் சென்று உள்ளனர்.

அப்போது அங்கு ஒரு கார் வந்தது. அந்த காரில் 3 வாலிபர்கள் இருந்தனர். அவர்கள் நவீன் சக்கரவர்த்தி மற்றும் பிரதீப் ஆகியோரை கத்தி முனையில் மிரட்டி காருக்குள் ஏற்றி உள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த இருவரும் சத்தம் போட்டு உள்ளனர்.

இரவு நேரம் என்பதால் உதவிக்கு யாரும் வரவில்லை. இருவரையும் காரில் ஏற்றிச் சென்று அவர்கள் நவீன் சக்கரவர்த்தி மற்றும் பிரதீப் ஆகியோரிடம் இருந்த செல்போன் மற்றும் தங்க சங்கிலி ஆகியவற்றை பறித்துக் கொண்டனர்.

காருக்குள் சிக்கிக் கொண்ட இருவராலும் அவர்களிடமிருந்து தப்ப முடியவில்லை. கத்தி வைத்து மிரட்டியதால் இருவரும் காருக்குள் பயந்து நடுங்கி உள்ளனர். அதன் பிறகு அந்த கும்பல் நவீன் சக்கரவர்த்தியிடம் பணத்தைக் கேட்டு மிரட்டி உள்ளனர். ஆனால் அவர் பணம் இல்லை என்று கூறி உள்ளார். அதன் பிறகு அவரது செல்போனில் இருந்து ஜி பே. மூலம், 20 ஆயிரம் பணத்தை அந்த கும்பல் மிரட்டி வாங்கி உள்ளது. கத்தி முனையில் செல்போன் மற்றும் பணம் நகைகளை பறிகொடுத்த நவீன் சக்கரவர்த்தி மற்றும் பிரதீப் ஆகியோர் காரிலேயே நீண்ட நேரம் அலைக்கழிக்கப்பட்டு உள்ளனர்.

அதன் பிறகு அந்த கும்பல் மீண்டும் அவர்களை அதே இடத்தில் இறக்கிவிட்டு காரில் தப்பி சென்று விட்டனர். இந்த சம்பவம் குறித்து நவீன் சக்கரவர்த்தி சாய்பாபா காலனி போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்தார்.

இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

நவீன் சக்கரவர்த்தி மற்றும் பிரதீப் ஆகியோர் கூறிய அங்க அடையாளங்கள் மற்றும் செல்போன் நம்பர்கள் ஆகியவற்றின் மூலம் போலீசார் துப்பு துலக்கினர்.

அப்போது நவீன் சக்கரவர்த்தி மற்றும் பிரதீப் ஆகியோரிடம் பணம் நகைகளை பறித்து சென்றது விருதுநகர் மாவட்டம் மேல தெருவை சேர்ந்த கார்த்திக் ( 25), கவுண்டம் பாளையம் பிரபு நகரை சேர்ந்த ஹரி கிருஷ்ணன் (25), விருதுநகர் நந்தவனம் பட்டி பிரதீப் (23) என தெரியவந்தது. அவர்களை போலீசார் மடக்கி கைது செய்தனர்.

இதில் கார்த்திக் மற்றும் பிரதீப் ஆகியோர் தற்போது கோவை ஒண்டிப்புதூர் பகுதியில் தங்கி இருந்து வந்தது தெரிய வந்தது. இவர்கள் 3 பேரையும், கைது செய்த போலீசார் அவர்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# மது குடிக்க பணம் தராத தாயை அடித்து கொலை செய்தவருக்கு ஆயுள்!

ஊட்டி,ஜன.26

மது குடிக்க பணம் தராத தாயை அடித்து கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை விதித்து ஊட்டி குடும்ப நல நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அடுத்த ஆறுக்குச்சி கீழ்ஓசட்டி பகுதியை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவருடைய மனைவி ஆலமதி(80). இவர்களுடைய மகன் ராஜேந்திரன்(60). இவருக்கு திருமணம் ஆகி குடும்பத்தை பிரிந்து விட்டதால் அம்மாவுடன் வசித்து வந்தார். ராஜேந்திரன் அவ்வப்போது ஓட்டுநர் வேலைக்கு சென்று வந்தார்.ராமகிருஷ்ணன் அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்றதால் அவருடைய ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ. பத்தாயிரம் ஆலமதிக்கு கிடைத்தது. இந்த பணத்தைக் கேட்டு ராஜேந்திரன் அவ்வப்போது தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 1212024 அன்று திருச்சியில் உள்ள தனது மகள் பத்மாவதியை பார்க்க சென்று விட்டு கீழ்ஓசட்டி வீட்டுக்கு வந்த ஆலமதியிடம் ராஜேந்திரன் பணம் கேட்டுள்ளார். அதற்கு ஆலமதி மறுத்ததால், மகள்களிடம் மட்டும் பணத்தை தருகிறாய் எனக்கு பணம் தர மாட்டாயா என்று கூறி அருகில் இருந்த குச்சியை எடுத்து சரமாரியாக தாக்கியுள்ளார். இதைப் பார்த்த அக்கம் பக்கத்தினர் ஆலமதியின் மற்றொரு மகள் லலிதாவுக்கு தகவல் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து லலிதா சம்பவ இடத்திற்கு வந்து ஆலமதியை மீட்டு சிகிச்சைக்காக குன்னூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தார். இதையடுத்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஆலமதி சிகிச்சை பலனில்லாமல் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து கொலக்கம்பை காவல் ஆய்வாளர் பத்ரா தலைமையிலான போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி ராஜேந்திரனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை ஊட்டியில் உள்ள கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது.

இதன்படி மது குடிக்க பணம் தராத தாயாரை அடித்து கொலை செய்த ராஜேந்திரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து குடும்ப நல நீதிபதி லிங்கம் உத்தரவிட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர்கள் ஆனந்த், முகமது ஆகியோர் ஆஜராகி வாதாடினர். இதைத் தொடர்ந்து ராஜேந்திரன் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



69–வது நேஷனல் ஸ்கூல் கேம்ஸ் 17 வயதுக்கு உட்பட்ட சைக்கிளிங் ரேஸ் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ராஞ்சி யில் நடைபெற்றது. அதில் கோவை மாவட்டம் கோவைபுதூர் ஆசிரமம் பள்ளியில் படிக்கும் மாணவி ஹாசினி 20 கிலோமீட்டர் ரோடு சைக்கிளிங் பந்தயத்தில் கலந்து கொண்டு சில்வர் பதக்கம் வென்றார்.

# ஊட்டியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட போக்குவரத்து காவலர் உட்பட 3 பேர் கைது!

ஊட்டி,ஜன.26

ஊட்டியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த போக்குவரத்து காவலர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். கஞ்சா விற்பனை தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு முறையாக தகவல் தெரிக்காத ஊட்டி நகர போக்குவரத்து உதவி ஆய்வாளர் அருண் மற்றும் மத்திய காவல் நிலைய தனிப்பிரிவு காவலர் ஜெயகுமார் ஆகியோர் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர். நீலகிரி மாவட்டம் ஊட்டியை சேர்ந்த குரூஸ்(26) என்ற இளைஞர் கடந்த 21ம் தேதி கஞ்ச விற்பனை செய்த போது போலீஸார் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் ஊட்டி நகர போக்குவரத்து பிரிவில் காவலராக பணியாற்றி வரும் நசீர் அகமதுவிடம் வாங்கியதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து நசீர் அகமதுவிடம் நடத்திய விசாரணையில் கேரளா மாநிலம் அட்டபாடி அருகே உள்ள கோட்ட தொரையை சேர்ந்த மோகன சுந்தரம் என்ற கஞ்சா வியாபாரியிடம் வாங்கி விற்பனை செய்து வந்ததாக தெரிவித்தார்.

இதனையடுத்து ஊட்டி நகர மத்திய காவல் நிலைய போலீஸார் அட்டபாடி அருகே உள்ள கோட்டதொரைக்கு சென்று சோதனை செய்ததில் 17 கிலோ கஞ்சா சிக்கியது. இதனையடுத்து கஞ்சா வியாபாரியை கைது ஊட்டிக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி, போக்குவரத்து காவலர் உட்பட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

இதனிடையே கடந்த 21ம் தேதி நடந்த கஞ்சா விற்பனை தொடர்பாக தகவலை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு முறையாக தெரிக்காத ஊட்டி நகர போக்குவரத்து உதவி ஆய்வாளர் அருண் கூடலூருக்கும், ஊட்டி மத்திய காவல் நிலைய தனிப்பிரிவு காவலர் ஜெயகுமார் ஆகியோர் தேவாலா காவல் நிலையத்திற்கும் பணியிடமாற்றம் செய்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா உத்தரவிட்டுள்ளார்.



சரவணம்பட்டி நகர கூட்டுறவு கடன் சங்கம், கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி, கூட்டுறவு கல்வி நிதிக்கான காசோலையை கோவை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அழகிரியிடம் சங்கத்தின் செயலாட்சியர் வாணி வழங்கினார். அருகில் அலுவலக கண்காணிப்பாளர் இளவேந்தன், சங்கத்தின் செயலாளர் தனலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

# கோவை மாவட்ட சங்கம் சார்பில் டென்னிஸ் போட்டி தொடக்கம்!

கோவை,ஜன.26

கோவை மாவட்ட டென்னிஸ் சங்கம் சார்பில் டென்னிஸ்போட்டி லீக் சுற்றுகள் இன்று முதல் தொடங்குகிறது.போட்டிகள் காவை,திருப்பூர்,நீலகிரி மற்றும் பொள்ளாச்சியில் வார இறுதி நாட்களில் காலை 7முதல் 11 மணி வரையும்ல பகல் 3 மணிமுதல் 6 மணி வரையும் நடைபெற உள்ளது.இது குறித்து கோவை மாவட்ட டென்னிஸ் சங்கத்தின் செயலாளர், சதீஷ்,மற்றும் துணைத் தலைவர் சொக்கலிங்கம் ஆகியோர் கூறியதாவது; இந்த ஆண்டு நடைபெறும் லீக் போட்டியில்11 பிரிவுகளில் 116 அணிகள்மற்றும் சுமார் 1200 வீரர்கள் பங்கேற்க உள்ளனர், 1977 ம் ஆண்டு கோவையில் டேவிஸ் கோப்பை போட்டிகளை கோவை மாவட்ட டென்னிஸ் சங்கம் வெற்றிகரமாக நடத்தியது, இதனைத் தொடர்ந்து 1978 ம் ஆண்டு கோவை மாவட்ட டென்னிஸ் சங்கம் தனது முதல் டென்னிஸ் லீக் போட்டியை தொடங்கியது இந்த ஆண்டு கோவை மாவட்ட டென்னிஸ் சங்கத்தின் சார்பில் 48 வது ஆண்டாக போட்டி நடைபெற உள்ளது.கேஜி ரமேஷ் , மனோஜ்ராகவன், ஸ்ரீராம் பாலாஜி, நிருபமா போன்ற வீரர்களை உருவாக்கிய கோவை இன்று ஜூனியர் ஐடிஎப் உலக தரவரிசையில் 34வது இடத்தில் உள்ள மாயாவையும் உருவாக்கியுள்ளது, கோவையில் ரேஸ்கோர்ஸ்,காளப்பட்டி உள்ளிட்ட இடங்களில் உள்ள பல்வேறு கிளப்களில் இந்த போட்டிகள் நடைபெற உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# துப்பட்டாவால் தூக்குப்போட்டு இளம்பெண் தற்கொலை!

## கோவை காரமடையில் சம்பவம்!!

பெ.நா.பாளையம்,ஜன.26

கோவை காரமடை பகுதியை சேர்ந்த அமிர்தா ரஜனி(48) தனது மகள் ஆர்த்தி உடன் வசித்துக் கொண்டு டெய்லர் வேலை பார்த்து வந்தார்.இவருடைய இளைய மகள் அருந்ததி வயது (21). கடந்த ஐந்து மாதத்துக்கு முன்பு ஆதவ பிரகாஷ் என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டு தண்ணீர் பந்தல் தங்கமணி கார்டன் எக்ஸ்டென்ஷன் பகுதியில் மாமியார் ராஜேஸ்வரி மற்றும் கொழுந்தன் அருண் ஆகியோருடன் கூட்டு குடும்பமாக வசித்து வந்துள்ளனர். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அருந்ததிக்கு அபார்ஷன் ஆகியுள்ளது.



இது தொடர்பாக சண்டை ஏற்பட்டுள்ளது.இதனால் கணவன் வெளியே சென்ற போது நேற்று அருந்ததி வீட்டின் மாடி பெட்ரூமில்துப்பட்டாவால் தூக்கு மாட்டி தற்கொலை செய்து உள்ளார். வெளியில் இருந்து வந்த ஆதவபிரகாஷ் பார்த்து துப்பட்டாவை அறுத்து அருந்ததியை கட்டிலில் வைத்து 108க்கு தகவல் சொல்லி உள்ளார்.அவர்கள் பரிசோதித்து பார்த்துவிட்டு இறந்து விட்டதாக கூறியதின் பேரில் பெரியநாயக்கன்பாளையம் போலிஸில் புகார் கொடுத்துள்ளார். இது குறித்து இன்ஸ்பெக்டர் ராஜேஷ் கண்ணன் விசாரணை செய்து வருகிறார்.



# உடுமலை வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் போக்குவரத்து விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு!

உடுமலை,ஜன.26

உடுமலை வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் போக்குவரத்து விழிப்புணர்வு பேரணி நடந்தது.

நீதிபதிகள் நம்பிராஜன்,தனபாலன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

குட்டைத் திடலில் தொடங்கிய பேரணியை நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி நம்பிராஜன் சார்பு நீதிபதி தனபாலன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் குமார் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பாஸ்கரன், ஆய்வாளர் சக்திவேல், மற்றும் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இருசக்கர வாகனம், பழுது பார்ப்போர் ,ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், பயிற்சியாளர்கள், கலந்து கொண்டனர். பேரணி தளிசாலை பைபாஸ் சாலை ராஜேந்திரா சாலை கபூர் கான் வீதி வழியாக எலைய முத்தூர் சாலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அடைந்தது.

அங்கு அனைவரும் போக்குவரத்து விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர் . போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிப்பது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

# ஈரோடு சட்டக் கல்லூரியில் 16-வது தேசிய வாக்காளர் தினவிழா!

கோபி ஜன.26

ஈரோடு சட்டக் கல்லூரியில் 16வது தேசிய வாக்காளர் தின விழா முன்னிட்டு ஈரோடு மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ராம்குமார் மற்றும் பெருந்துறை வருவாய் வட்டாட்சியர் ஜெகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். ஈரோடு சட்டக்கல்லூரி முதல்வர் அக்பர் அலி பெய்க் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இதனைத் தொடர்ந்து, மாவட்ட வழங்கல் அலுவலர் . ராம்குமார் தேசிய வாக்காளர் தினத்தின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். குடிமக்கள், பின்னர், அவர் தலைமையில் மாணவர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவரும் ஒருசேர 'வாக்காளர் உறுதிமொழி' எடுத்துக் கொண்டனர்;

அடுத்ததாக, பெருந்துறை வட்டாட்சியர் ஜெகநாதன் தகுதியுள்ள வாக்காளராக மாறுவதற்கான நடைமுறை அம்சங்கள் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார். வாக்காளர் பதிவிற்குத் தேவையான பல்வேறு படிவங்கள், பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் மற்றும் தகுதியுள்ள ஒவ்வொரு குடிமகனின் பெயரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் குறித்துபேசினர் . இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக, எல்எல்பி மாணவர்களான நரேந்திர பிரசாத், தருண் குமார் மற்றும் செல்வி. மைதிலி ஆகியோர் ஒவ்வொருவரும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் இளைஞர்களின் பங்கு மற்றும் வாக்களிப்பின் அவசியம் குறித்து பேசினர். மாணவர்களின் பங்கேற்பைப் பாராட்டும் விதமாக, சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். விழாவில் ஈரோடு சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# கோழித்தீவன ஆலைக் கழிவுகளால் பாதிப்பு; விவசாயிகள் குற்றச்சாட்டு!

ஈரோடு, ஜன.26

எண்ணெய் மற்றும் கோழித்தீவன ஆலைக் கழிவுகளால் விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது என விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வேளாண் குறைதீர் கூட்டம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ச.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் தொடங்கியதும் பாலமுருகன் என்ற விவசாயி சட்டையை கழற்றிவிட்டு கூட்ட அரங்கில் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போது அவர் கூறியதாவது: சாமிநாதபுரத்தில் செயல்படும் எண்ணெய் மற்றும் கோழித்தீவன ஆலையில் இருந்துசுத்திகரிக்கப்படாத கழிவுகள் வெளியேற்றப்பட்டுள்ளன.

இதனால், அங்குள்ள விளைநிலங்கள், நிலத்தடி நீர், காற்று ஆகியவை மாசுபட்டுள்ளன.

அண்மையில் அதிகமாக கழிவு நீர் வெளியேற்றப்பட்டதால் காலிங்கராயன் வாய்க்கால் ஓடையில் மீன்கள் இறந்து மிதந்ததன. அதன்பிறகு ஓரிரு நாள் மட்டும் மின்சாரத்தை துண்டித்துவிட்டு, தற்போது மீண்டும் இணைப்பு வழங்கப்பட்டு ஆலை இயங்குகிறது. வயலில் உழவு ஓட்டினால் உடல் முழுவதும் புண் ஏற்படுகிறது என்றார். அதிகாரிகள் சமாதானத்தை தொடர்ந்து அவர் போராட்டத்தை கைவிட்டார்.

இதைத் தொடர்ந்து, விவாதத்தில் பங்கேற்ற விவசாயிகள் பேசியதாவது:சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத் தலைவர் முகிலன்: சாமிநாதபுரம் எண்ணெய், கோழித்தீவன ஆலையில் கழிவுகள் வெளியேற்றத்தால் மனிதர்கள், ஆடு, மாடு, விளைநிலங்கள் பாதிப்படைவது குறித்து அதிகாரிகள் கவலைப்படவில்லை.

கோழிக்கு தீவனம் வழங்காவிட்டால் கோழி இறந்துவிடும் என ஆலைக்காக கவலைப்படுகிறார்கள். அந்த ஆலை மீது குற்றவியல் நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்றார்.